**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்– தாட்கோ - 2022-2023-ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் – மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - 500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் கறவை மாடுகள் வாங்க தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2.25 கோடி மானியம் வழங்குதல் – நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉ.தி)துறை**

அரசாணை (நிலை) எண். 64 நாள்:11.08.2022

சுபகிருது வருடம், ஆடி 26 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2053
படிக்கப்பட்டது:-

தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண்.ஜி1/1952/2022, நாள்.27.05.2022 மற்றும் 13.07.2022.

********

ஆணை:-

2022-2023-ஆம் ஆண்டிற்கான துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்கள் :-

**“பெருமளவில் விவசாயத் தொழில் புரியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களை பொருளாதாரத்தில் தற்சார்பு உடையவர்களாக மாற்றிடும் வகையில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள 500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் கறவை மாடுகள் வாங்க தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2.25 கோடி மானியம் வழங்கப்படும்”.**

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக, மேலே படிக்கப்பட்ட தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவில், கூட்டுறவு பால் உற்பத்தி சங்கத்தில் உறுப்பினராக பதிவு செய்யப்பட்ட 450 ஆதிதிராவிடர் மற்றும் 50 பழங்குடியினர் மக்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.1.50 இலட்சம் என்ற வீதத்தில் 500 நபர்களுக்கு திட்டத் தொகை ரூ.7.50 கோடி என்றும், இதில் பயனாளியின் பங்குத் தொகை ரூ.37.50 இலட்சம், மானியம் ரூ.225.00 இலட்சம், வங்கிக் கடன் ரூ.487.50 இலட்சம் என்று குறிப்பிட்டுள்ளார்.

3. மேலும் 450 ஆதிதிராவிட மக்கள் பயனடைய ரூ.202.50 இலட்சம் மானியம் (ரூ.45,000 X450 நபர்கள்) ஒன்றிய அரசு நிதியிலிருந்து (SCA to SCSP) செலவிட அனுமதியும், 50 பழங்குடியினர் மக்கள் பயனடையும் வகையில் ரூ.22.50 இலட்சம் மானியம் (ரூ.45,000X50 நபர்கள்) மாநில அரசு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து தருமாறும் மற்றும் 2022-23-ஆம் நிதியாண்டில் 450 ஆதிதிராவிடர் மற்றும் 50 பழங்குடியினர் மக்கள் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் மேற்படி திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கான அரசாணை வழங்கிடவும், இத்திட்டத்தினை செயல்படுத்திட தேவையான வழிகாட்டி நெறிமுறைகளை வகுத்து அரசின் ஒப்புதல் பெற்று செயல்படுத்திட அனுமதி அளிக்குமாறும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் அரசுக்கு பரிந்துரைத்தார்.

4. தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, பெருமளவில் விவசாயத் தொழில் புரியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களை பொருளாதாரத்தில் தற்சார்பு உடையவர்களாக மாற்றிடும் வகையில், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள 450 ஆதிதிராவிடர் மக்களுக்கு கறவை மாடுகள் வாங்க தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.202.50 இலட்சம் (ரூபாய் இரண்டு கோடியே இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மானியமாக ஒன்றிய அரசு நிதியிலிருந்து (SCA – SCP) செலவிட நிர்வாக அனுமதி வழங்கியும் மற்றும் 50 பழங்குடியினர் மக்களுக்கு கறவை மாடுகள் வாங்கி பயனடைய ரூ.22.50 இலட்சம் (ரூபாய் இருபத்தி இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மாநில அரசு நிதியிலிருந்தும் பெற்று வழங்க நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட 450 ஆதிதிராவிடர் மக்களுக்கு ரூ.202.50 இலட்சம் மானியத்தை ஒன்றிய அரசின் PMAJAY (SCA to SCSP) திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

6. மேலே பத்தி-4-இல் 50 பழங்குடியினர் மக்கள் பயனடையும் விதமாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ-22.50 இலட்சம் (ரூபாய் இருபத்தி இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

**"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் JY விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 309 உதவித் தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை."**

**(து.தொ.கு.2225 02 796 JY 30901)"**

7. மேலே பத்தி 4-இல் மாநில அரசு நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை, பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை, தாட்கோ மூலம் செயல்படுத்த ஏதுவாக இத்தொகையினைப் பெற்று தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் கீழ்க்காணும் அலுவலக பெயர் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர்வரவாக (Contra Credit) வரவு வைப்பதற்கு பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது.

**" K வைப்புத் தொகைகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் 8443-00-உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத் தொகைகள் – BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக வைப்புத் தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள்."**

**(து.தொ.கு.8443 00 800BY 000G) (Receipt)**

**(து.தொ.கு.8443 00 800 BY 0004) (Outgo)**

8. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர்/பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி இத்திட்டத்தினை செயல்படுத்த இணைப்பில் உள்ள வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றுமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 39842 / நிதி (ஆதி(ம )பந) /2022, நாள். 08.08.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது..

//ஆளுநரின் ஆணைப்படி//

T.S. ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

இயக்குநர் , ஆதி திராவிடர் நலம், சென்னை-5
இயக்குநர் ,பழங்குடியினர் நலம், சென்னை- 5
மேலாண்மை , இயக்குநர் , தாட்கோ , சென்னை -18,
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர் , (இயக்குநர் ஆதிதிராவிடர் நலம் வழியாக)
அனைத்து மாவட்ட மேலாளார் , தாட்கோ.
(மேலாண்மை இயக்குநர் தாட்கோ, வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர் ,சென்னை 18/35
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் , சென்னை
மாவட்ட திட்ட அலுவலர் ,( பழங்குடியினர் நலம்)
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் ,சென்னை-9
ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர் , சென்னை -9

நகல் :-

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர் , சென்னை-9
நிதி (ஆதி (ம )பந) த்துறை , சென்னை -9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல
(அநமு -1 / ஆதிந-5 / ப.மே 1) த் துறை ,சென்னை-9
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சி. சிவக்குமார் 11/8/2022
பிரிவு அலுவலர்

11/8/22

<u>இணைப்பு -I</u>

<u>அரசாணை (நிலை) எண்.64 , ஆதி(ம)பந(சிஉ_தி)துறை, நாள். 11.08.2022</u>

## <u>வழிகாட்டு நெறிமுறைகள்</u>

<u>புதிய அறிவிப்பு எண் -11 /2022-23</u>

<u>500 ஆதிதிராவிடர் மற்றும்பழங்குடியினருக்கு தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டடத்தின் கீழ் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் கறவை மாடுகள் வாங்க ரூ.2.25 கோடி மானியம் வழங்கப்படும் திட்டத்தை செயல்படுத்த வழிகாட்டு நெறிமுறைகள்.</u>

**தகுதிகள்.**

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராக இருத்தல் வேண்டும்.
2. வயது வரம்பு 18 முதல் 65 வயது வரை இருக்க வேண்டும்.
3. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
4. விவசாயம் / விவசாயம் சார்ந்த தொழில் செய்பவராக இருக்க வேண்டும்.
5. விண்ணப்பதாரர் தாட்கோ திட்டத்தின் கீழ் இது வரை மானியம் பெற்றிருக்க கூடாது.

**நிபந்தனைகள்.**

1. மாட்டின் வயது மூன்று முதல் நான்கிற்குள் இருக்க வேண்டும்.
2. மாடு வாங்குபவரிடமிருந்து பச்சைத் தாளில் மாடுகளின் விலையை குறிப்பிட்டு எழுதி வாங்க வேண்டும்
3. இத்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்படும் திட்டத்தொகை ரூ.1,50,000/- இலட்சத்தில் 30% அதாவது ரூ.45,000/-மானியமாக விடுவிக்கப்படும்.
4. சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள அரசு கால்நடை மருத்துவர் உரிய காப்பீடு செய்து சான்றிதழ் வழங்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரர் கீழ்கண்ட ஆவணங்களுடன் தாட்கோ இணையதளம் http://application.tahdco.com என்ற இணைதளத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | குடும்ப அட்டை | 4 | இருப்பிட சான்று |
| 2 | சாதி சான்று | 5 | ஆதார் அட்டை |
| 3 | வருமான சான்று | 6 | புகைப்படம் |

**விண்ணப்பதாரர்களை தெரிவு செய்யும் முறை**

கீழ்கண்ட அலுவலர்களை கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழு விண்ணப்பதாரர்களை தேர்வு செய்யும்.

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | ஒருங்கிணைப்பாளர் (ம) உறுப்பினர் |
| இணை இயக்குநர், கால்நடை துறை மருத்துவர் | உறுப்பினர் |
| மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் | உறுப்பினர் |

T.S. ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.